காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 யூலை 31 ஆம் திகதிய கடன்கள் மற்றும் மானியங்களிற்கான பொது நிபந்தனைகளின் 4:09(ஆ) பிரிவு மற்றும் 2014 யூலை 10 ஆம் திகதிய 5417-எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் 2 ஆம் பட்டியலின் II சீ பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் விவசாயம், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சாகவிருந்த தற்போதைய நீர்ப்பாசன அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை மகாவலி அதிகாரசபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. காலநிலை ஆபத்தால் மக்கள் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைத்தல் மற்றும் அனர்த்தங்களை செயற்திறனாக எதிர்த்து செயலாற்றுவதற்கான பெறுநர் இயலளவை மேம்படுத்துதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 14,617 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 111.8 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 14,382 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 110 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2014 ஆகஸ்ட் 05 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2020 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செலவினக் கூற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| இலக்கம் | கணக்கீட்டுக் குறைபாடுகள்/ கணக்காய்வு விடயங்கள் | பெறுமதி ரூபா. மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| 01 | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 24 ஆம் பந்தியின் பிரகாரம் அறிக்கையிடல் காலப் பகுதிக்குரிய பாதீட்டுடன் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட தொகைகள் இணக்கம் செய்தல் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். எனினும் அந்த தேவைகளுக்கு இணங்கியிருக்கவில்லை. | 1,891.94 | செயற்திட்டத்தின் மூலம் செயற்திட்ட கூறுகளின் அடிப்படையில் பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்படுகின்றது. 2014 ஆகஸ்ட் இல் செயற்திட்ட ஆரம்பம் முதல் இந்த ஏற்றுக் கொள்ளல் பின்பற்றப்பட்டிருந்ததுடன், இது உலக வங்கியை உள்ளடக்கிய உரிய அதிகாரிகளினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிராகரம் மதிப்பீடு மற்றும் உள்ளபடியான செலவினங்களை உள்ளடக்கிய ஒப்பீட்டு ரீதியான அறிக்கை இணைக்கப்பட்டுள்ளது. | பொதுத் துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| 02 | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் 18 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றின் செயற்பாடுகள், முதலீடுகள் மற்றும் நிதி செயற்பாடுகளின் கீழ் பந்தி 21 முதல் 32 வரை அர்த்தப்படுத்தப்பட்டுள்ள பிரகாரம் செயற்பாடுகள், முதலீடுகள் மற்றும் நிதி செயற்பாடுகளாக வகைப்படுத்துதல் மற்றும் அறிக்கையிடல் மேற்கொள்ளப்படல் வேண்டும். வகைப்படுத்தும் அடிப்படையில் பின்வரும் இனங்காணலுடன் மேற்கூறப்பட்ட நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்று இணங்கியிருக்கவில்லை. | 1,890.34 | ஐயவினாவின் பிரகாரம் ரூபா 3,000,000 தொகை உள்நாட்டு நிதியத்தில் இருந்தும், ரூபா 1,525,046,601 தொகை வெளிநாட்டு நிதியத்தில் இருந்தும் இடப்பட்டிருந்தது. செயற்திட்ட ஆரம்பம் முதல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகள் 2020 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. தேவையான திருத்தங்கள் செயற்திட்டத்தில் எதிர் வரும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படும். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களின் தேவைகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக இலங்கை அரசாங்கத்தின் நிதியில் இருந்து ரூபா 7,000,000 தொகையும், உலக வங்கி ஒத்துழைப்புடன் ரூபா 1,883,342,078 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட செலவினங்களில் கணிசமான சதவீதம் செயற்திட்டத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்டிருந்தது. இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இல் மேற்குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கு இணங்க செலவின கூற்றுக்கள் தயாரிக்கும் போது செயற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் முதலீட்டு செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட பணம் அந்த செலவிங்களில் தனித்தனியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேற்கூறப்பட்ட பிரகாரம் ரூபா 205,084,804 தொகை முதலீட்டு செயற்பாடாக இனங்காணப்பட்டிருந்ததுடன், மிகுதி ரூபா 1,772,663,385 மொத்த முதலீடாக செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் இனங்காணப்பட்டிருந்தது. | | | |
| (ஆ) | முற்பண கணக்கு மீதி நடப்பாண்டில் ரூபா 114,303,586 இனால் குறைவடைந்திருந்ததுடன், ஏனைய மீதிகளின் சேமிப்பு ரூபா 26,897,246 இனால் நடப்பாண்டில் குறைவடைந்திருந்தது. நியமத்தின் நியதிகளுக்கு இணங்க காசுப்பாய்ச்சல் | 141.20 | முற்பண கணக்குகள் மற்றும் ஏனைய செலுத்தப்பட்ட மீதிகள் செயற்திட்டத்தினால் கணக்காய்விற்கு முன்னைய ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்ட பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் அந்த விதத்திலேயே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களின் தேவைகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | கூற்று தயாரிக்கும் போது முதலீட்டு செயற்பாடுகள் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை இனங்காணாமல் சீராக்கங்கள் முழுமையாக செயற்பாட்டு நடவடிக்கைகளில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | | |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் 31 ஆம் பந்தியின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தினால் நடப்பாண்டின் போது அரசாங்கத்தின் நிதியத்தில் இருந்து செலவிடப்பட்ட ரூபா 7 மில்லியன் தொகை நிதி செயற்பாடுகளின் மூலம் உருவான காசுப்பாய்ச்சல்கள் தனியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | 7 | எதிர்காலத்தில் காசுப் பாய்ச்சல் கூற்றுக்களில் உள்நாட்டு நிதியத்தில் இருந்து செலவிடப்பட்ட செலவினங்களை வேறுபடுத்துவதற்கான வேலைத் திட்டமொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களின் தேவைகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் 59, 60, 61, 62 ஆம் பந்திகளின் கீழ் ஏனைய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படாதிருந்தமையால் உரிய காசுப்பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்ட நிதி அறிக்கையிடல் தேவைகளுக்கு இணங்கியிருக்கவில்லை. | | செயற்திட்டத்தினால் எதிர்வரும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற காசுப்பாய்ச்சல் கூற்றுக்களில் கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள சீராக்கங்களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களின் தேவைகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 ஒப்பந்த நிர்வாகம்

| இலக்கம் | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 01 | வழங்கப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் நீர்ப்பாசன திணைக்களத்தினால் ரூபா 5,488.91 மில்லியன் தொகையான 443 ஒப்பந்த பொதிகள் கையளிக்கப்பட்டிருந்ததுடன், அது மீளாய்வாண்டின் இறுதியில் 382 ஒப்பந்த பொதிகள் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. ரூபா 286.04 மில்லியன் பெறுமதியான 27 ஒப்பந்த பொதிகள் ஒப்பந்த காலத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த பொதிகள் 01 மாதம் முதல் 35 மாதங்கள் வரையான தாமதத்தில் காணப்பட்டது. | கணக்காய்வு ஐயவினாவில் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் CRIP நிதியத்தின் கீழ் நீர்ப்பாசன திணைக்களத்தினால் கையளிக்கப்பட்ட ரூபா 286.04 மில்லியன் பெறுமதியான 27 ஒப்பந்த பொதிகள் குறித்த ஒப்பந்த காலத்தில் பூர்த்தி செய்யப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது அவ்வாறே இந்த பொதிகளின் தாமதம் 01 மாதம் முதல் 35 மாதங்கள் வரையான வீச்சில் காணப்பட்டது. எதிர் பாராத காலநிலை நிலைமை மற்றும் இரும்பு போன்ற நிர்மாண பொருட்கள் சந்தையில் காணப்படாமை, குறித்த காலத்தில் மண் மற்றும் கல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதில் வசதியீனம், பயணத்தடை கட்டுப்பாட்டு வரையரையின் கீழ் குறித்த நேரத்தில் ஊழிய படையணியினை பெற்றுக் கொள்வதில் வசதியீனம் மற்றும் காணப்பட்ட கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமையினால் ஏற்பட்ட முடக்க நிலைமைகள் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. இந்த ஒப்பந்த பொதிகள் ஒப்பந்த காலத்தில் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. கொவிட் - 19 தொற்றுநோய் தாக்கத்தின் காரணமாக உலக வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் (GOSL) செயற்திட்டம் நீடிக்கப்பட்டிருந்தது. எனினும், தேவை அடிப்படையில் சகல ஒப்பந்தங்களுக்குமான கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்ததுடன், CRIP அமுல்படுத்தும் இறுதி திகதியான 2021 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் சகல தொடர்புடைய பொதிகளும் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | வேலைத் திட்டத்தின் பிரகாரம் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் அவசியமாகும். செயற்திட்ட காலத்தை நீடிப்பதற்கு பரிந்துரை செய்வதற்கு முன்னர் தாமதத்திற்கான காரணங்களை இனங்காண்பதற்காக சரியான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| 02 | வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 86 ஒப்பந்த பொதிகள் ரூபா 1,525.94 மில்லியன் தொகையில் இலங்கை மஹாவலி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் அதில் 82 ஒப்பந்த பொதிகள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. பெறுமதி ரூபா 203.80 மில்லியன் தொகையான 04 ஒப்பந்த பொதிகள் ஒப்பந்தகாலத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த பொதிகளை பூர்த்தி செய்வதற்கான தாமத கால எல்லை 32 மாதங்கள் முதல் 47 மாதங்கள் வரையான வீச்சில் காணப்பட்டது. | CRIP நிதியீட்டத்தின் கீழ் இலங்கை மஹாவலி அதிகார சபையினால் கையளிக்கப்பட்ட ரூபா 203.80 மில்லியன் பெறுமதியுடைய 04 ஒப்பந்த பொதிகள் ஒப்பந்த காலத்தில் பூர்த்தி செய்யப்படாதிருந்தமை குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்த பொதிகளை பூர்த்தி செய்வதற்கான தாமத கால எல்லை 32 மாதங்கள் முதல் 47 மாதங்கள் வரையான வீச்சில் காணப்பட்டது. எதிர்பாராத கால நிலைமை மற்றும் இரும்பு போன்ற நிர்மாணப் பொருட்கள் சந்தையில் பற்றாக்குறையாக இருந்தமை, குறித்த நேரத்தில் மண் மற்றும் கல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதில் வசதியீனம், பயணத்தடை கட்டுப்பாட்டின் கீழ் ஊழியர் படையணியை பெற்றுக்கொள்ளவதில் வசதியீனம், காணப்பட்ட COVID - 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக ஏற்பட்ட முடக்க நிலைமையின் காரணமாக இந்த நிலை ஏற்பட்டிருந்ததுடன் இந்த பொதிகளை ஒப்பந்த காலத்தில் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. COVID - 19 தாக்கத்தின் காரணமாக உலக வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் (GOSL) செயற்திட்டமும் நீடிக்கப்பட்டிருந்தது, எனினும், தேவையின் அடிப்படையில் இந்த சகல ஒப்பந்தங்களுக்குமான காலம் நீடிக்கப்பட்டிருந்ததுடன், CRIP அமுல்படுத்தும் இறுதி திகதியான 2021 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் சகல ஒப்பந்த பொதிகளும் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | வேலைத் திட்டத்தின் பிரகாரம் செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் அவசியமாகும். செயற்திட்ட காலத்தை நீடிப்பதற்கு பரிந்துரை செய்வதற்கு முன்னர் தாமதத்திற்கான காரணங்களை இனங்காண்பதற்காக சரியான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |
| 03 | ரூபா 5,297.25 மில்லியன் பெறுமதியான 32 ஒப்பந்த பொதிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் அதில் 17 ஒப்பந்த பொதிகள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. பெறுமதி ரூபா 1,880.90 மில்லியன் | CRIP நிதியத்தின் கீழ் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் கையளிக்கப்பட்ட ரூபா 1,880.90 மில்லியன் பெறுமதியுடைய 06 ஒப்பந்த பொதிகள் ஒப்பந்த காலத்தில் பூர்த்தி செய்யப்படாதிருந்தமை குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த பொதிகளை பூர்த்தி செய்வதற்கான தாமத காலம் 06 மாதங்கள் முதல் 46 மாதங்கள் வரையான வீச்சில் காணப்பட்டது. அநேகமாக தாமதமான பொதிகள் சில இடத்தில் மண் சரிவை குறைக்கும் வேலைத் தளமாக இருந்தது. தொடர்ச்சியாக காலநிலை தாக்கங்களின் கீழ் மண் சரிவு அபாய பிரதேசங்களில் (அதாவது ஹக்கல மண் சரிவு) போன்ற மண் சரிவுகளை குறைக்கும் நடவடிக்கைகளை | வேலை திட்டத்தின் பிரகாரம் செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் அவசியமாகும். செயற்திட்ட காலத்தை நீடிப்பதற்கு பரிந்துரை செய்வதற்கு முன்னர் தாமதத்திற்கான காரணங்களை இனங்காண்பதற்காக சரியான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகையான 06 ஒப்பந்த பொதிகள் ஒப்பந்த காலத்தில் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன், 06 மாதங்கள் முதல் 46 மாதங்கள் வரையிலான வீச்சிலான தாமதத்தில் இந்த பொதிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | நிறைவேற்றுவதற்கு பாதகமாக தாக்கமளித்திருந்தது. எதிர்பாராத கால நிலைமை மற்றும் பாதுகாப்பு வலை போன்றவற்றின் இறக்குமதி கட்டுப்பாடு போன்றவற்றின் காரணமாக பயணத்தடை கட்டுப்பாட்டின் கீழ் ஊழியர் படையணியை பெற்றுக்கொள்ளலில் வசதியீனம் மற்றும் காணப்பட்ட COVID - 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக முடக்க நிலையின் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. இந்த பொதிகளின் ஒப்பந்த காலத்தில் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. COVID - 19 தாக்கத்தின் காரணமாக உலக வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் (GOSL) செயற்திட்டமும் நீடிக்கப்பட்டிருந்தது, எனினும், தேவையின் அடிப்படையில் இந்த சகல ஒப்பந்த பொதிகளுக்காகவும் பொருத்தமான பிரகாரம் காலம் நீடிக்கப்பட்டிருந்ததுடன், CRIP அமுல்படுத்தும் இறுதி திகதியான 2021 ஏப்ரல் 31 இல் உள்ளவாறு சகல ஒப்பந்த பொதிகளும் திருப்திகரமாக பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | |
| 04 | கணக்காய்விற்காக வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் ரூபா 13,634.98 மில்லியன் பெறுமதியான 631 ஒப்பந்த பொதிகள் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ஒப்பந்த காரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 230.42 மில்லியன் பெறுமதியான 15 ஒப்பந்த பொதிகள் பல்வேறு காரணங்களால் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தகாரர்களின் கவனமின்மை, கையளிக்கப்பட்டுள்ள பணிகளை முழுமையாக பூர்த்திசெய்வதற்கான நீர் பிரச்சினைகள், காணி கைப்பற்றல்களில் கஷ்ட நிலை மற்றும் அதனால் தொடர்ச்சியாக செய்வதில் காணப்பட்ட பல்வேறு காரணங்களினால் அமுல்படுத்தப்படாத ஒப்பந்த பொதிகளின் எண்ணிக்கையை அமுல்படுத்துகின்ற நிறுவனத்தினால் முடிவுறுத்தப்பட்டிருந்தது. எனினும் திட்டமிடப்பட்ட பிரகாரம் வேலைகளை பூர்த்தி செய்தல் தேவையாக இருந்தமையினால் அநேகமான வேலைகள் பெறுகை நடவடிக்கைகளின் பின்னர் (உதாரணம்: சீபீ அல்லது கொள்வனவு) மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டு மீண்டும் கையளிக்கப்பட்டிருந்தது. தற்போது வரையில் மீண்டும் கையளிக்கப்பட்ட ஒப்பந்தங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு தவறுகின்ற உரிய ஒப்பந்தகாரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மேலதிக காலம் மற்றும் செலவினங்களை தவிர்த்துக் கொள்வதற்காக செயற்திட்டத்தின் செயற்பாடுகளை விரைவாக அமுல்படுத்துதல் அவசியமாகும். |

## 3.2 களப் பரிசோதனையின் போதான அவதானிப்புக்கள்

| இலக்கம் | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 01 | பெறுகை பட்டோலையின் 32.1 ஆம் பந்தியின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய தெரிவுப் பரிசோதனை, எனினும் மூதூர் அல்லை உத்தேச திட்டத்தின் இடது கரையின் 02 ஆவது பிரதான கால்வாய் சுவர் மற்றும் தெற்கு முனையில் பிரதான கால்வாய் கரையின் வீதிக்கு கிரவல் இடுவதற்காக ரூபா 42,494,417 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் எந்த விசாரணை அறிக்கையும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தம் சரியான பிரகாரம் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அநேகமான இடங்கள் உடைந்த நிலைமையில் காணப்படுகின்றமை களப்பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | வீதிப் பணிப்பாளர் திருகோணமலையின் பிரகாரம் சகல பிரிவுகளின் மண் பரிசோதனை நடவடிக்கைகள் அவர்களுக்கு சொந்தமாக காணப்படுகின்ற மாதிரியின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இரண்டு வருடங்கள் அளவிலான காலத்திற்கு முன்னர் இந்த பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதன் பின்னர் பாரியளவான டிப்பர் வாகனங்கள் அனுமதியற்ற மணல் போக்குவரத்துக்கள் வருடம் முழுவதும் இதன் மூலம் மேற்கொண்டிருந்தது. இந்த நிலைமை திருகோணமலை நீர்ப்பாசன பணிப்பாளரினால் மூதூர் பொலிஸ் நிலையத்தில் அறிவிக்கப்பட்டு/முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும் மணல் போக்குவரத்தை கட்டுப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. கணக்காய்வு ஐயவினாவில் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் வீதிக்கு கணிசமான அளவில் பாதிப்பு ஏற்படுத்துவதற்கு இது காரணமாகும். | இழப்பிற்குரிய தரப்பினரிடம் இருந்து அறவிடுதல் வேண்டும். |
| 02 | 2018 யூன் மாதத்தின் போது இந்த செயற்திட்டன் கீழ் அல்லை உத்தேச திட்டத்தின் தெற்கு கரை கால்வாய் கட்டின் அடிப்படையில் மீற்றர் 0+750 முதல் 15+000 வரையான பகுதியில் வீதியில் ரூபா 19,298,754 மில்லியன் தொகையில் கடடியெழுப்பப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மேற்கூறப்பட்ட வீதியில் மீற்றர் 1+950m முதல் 3+050m வரையான பகுதி காப்பட் இடப்பட்டிருந்ததுடன், 2020 | <u>அல்லை உத்தேச திட்டத்தின் RBMC கட்டு வீதி</u><br>2020 மத்திய அரைப்பகுதியில் மேற்கூறப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் CRIP நிர்மாணங்கள் பூர்த்தி செய்ததன் பின்னர் (CRIP வேலை பூர்த்தி செய்யப்பட்டு $2^1/_2$ வருடங்களின் பின்னர்) திருகோணமலை நீர்ப்பாசன பணிப்பாளரினால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் CRIP நிதியத்தின் கீழ் இந்த பணிகள் CRIP/WORKS/ID-TRI/NCB/231-1 ஒப்பந்தம் ஊடாக 2017 மார்ச் மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டு 2018 யூன் மாதம் அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. பிரதேச மக்களின் கணிவான | சிக்கனமற்ற பெறுமதிகள் உரிய தரப்பினரிடம் இருந்து அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | யூலை மாதத்தின் போது ஏனைய அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் மீற்றர் 5+400m முதல் 5+800m வரையான பகுதி கொங்கிரீட் இடப்பட்டிருந்தது. அதனால் இந்த வீதி அபிவிருத்திக்காக இந்த செயற்திட்டத்தின் கீழ் செலவிடப்பட்ட மொத்த தொகையும் பயனற்ற செலவினமாக கருதப்படுகின்றது. | கோரிக்கையின் அடிப்படையில் கிலோ மீற்றர் 14.0 இல் 400 மீற்றர் நீளத்திற்கு காபட் இடுவதற்கு நீர்ப்பாசன திணைக்களம் அனுமதி வழங்கியிருந்தது. | |
| 03 | இந்த செயற்திட்டத்தின் கீழ் மார்ச் மாத்தின் போது அல்லை உத்தேச திட்டத்தின் பிரதான வாய்க்கால் கட்டின் வீதி (வெந்திரசன் பிரதான கட்டு வீதி) மீற்றர் 0+00m முதல் 2+950m வரையான பகுதியில் வீதி ரூபா 4,381,360 மில்லியனுக்கு கட்டியெழுப்பப்பட்டிருந்தது. எனினும் மேற்கூறப்பட்ட வீதியில் 0+100m முதல் 2+950m வரையான பகுதி 2019 ஆம் ஆண்டில் ‘‘சிரிசர பிவுசும’’ அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் காபட் இடப்பட்டிருந்தது. அதனால் இந்த வீதி அபிவிருத்திகாக இந்த செயற்திட்டத்தின் கீழ் செலவிடப்பட்ட தொகை பயனற்ற செலவினமாகும். | <u>வெந்திரசன் பிரதான கால் வாய் கட்டு வீதி</u><br><br>திருகோணமலை நீர்பாசன பணிப்பாளரினால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் CRIP நிதியத்தின் கீழ் இந்த பணிகள் CRIP/WORKS/ID-TRI/NCB/221 என்ற ஒப்பந்தம் ஊடாக 2017 ஏப்ரல் மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டு 2018 மார்ச் வரையில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. CRIP செயற்திட்டத்தின் கீழ் இந்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் தமது அன்றாட நடவடிக்கைகளுக்காக இந்த வீதியை பயன்படுத்தி இருந்தனர். 2019 ஆம் ஆண்டில் ‘‘சிரிசர பிவுசும’’ என்ற பெயரில் புதிய நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் இந்த வீதியில் 2.95 கிலோ மீற்றரில் 1.0 கிலோ மீற்றருக்கு அன்னளவான பகுதியொன்று காபட் இடுவதற்கு இனங்காணப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் CRIP நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது ‘‘சிரிசர பிவுசும’’ நிகழ்ச்சித் திட்டத்தில் முன்வந்தமை தொடர்பாக அவ்வாறான நிலைமையொன்று காணப்படவில்லை. | சிக்கனமற்ற பெறுமதிகள் உரிய தரப்பினரிடம் இருந்து அறவிடப்படல் வேண்டும். |
| 04 | 2019 ஒக்டோபரில் செயற்திட்டத்தின் கீழ் கந்தளாய் பக்கிராவன்வெட்டியில் மீற்றர் 0m முதல் மீற்றர் 1+020m பகுதியில் புதிய வீதி ரூபா 4,895,354 தொகையில் | திருகோணமலை நீரப்பாசன பணிப்பாளரினால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் CRIP நிதியத்தின் கீழ் CRIP/WORKS/ID-TRI/NCB/222-2 ஒப்பந்தம் ஊடாக 2017 யூன் மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டு 2018 யூலை | வரிசை நிறுவனங்களுடன் சரியான தொடர்பினை பேணிச் செல்லல் |

| | | | |
|---|---|---|---|
| | அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. எனினும் மேற்கூறப்பட்ட வீதி 2020 செப்டம்பரில் மீற்றர் 1+00m முதல் மீற்றர் 1+100m வரையான பகுதி ஏனைய அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் கெங்கிரீட் இடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த செயற்திட்டத்தின் கீழ் இந்த வீதிகளின் அபிவிருத்திக்காக இந்த வீதிகளின் அபிவிருத்திக்காக செலவிடப்பட்ட செலவினம் பயனற்ற செலவினமாக கருத முடியும். | மாதம் அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. வீதியின் மொத்த நீளம் 1.0 கிலோ மீற்றர் அளவாகும். 2019 ஆம் ஆண்டின் போது கந்தளாய் பிரதேச சபையினால் கொங்கிரீட் இடுவதற்காக கால்வாய் கட்டு வரை 100 மீற்றர் நீளம் போம் மினி வீதியொன்று இனங்காணப்பட்டு அதில் தெரிவுசெய்யப்பட்ட வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டில் மேற்கூறப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் CRIP வேலை ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் வீதியில் கொங்கரீட் இடுவதற்காக பிரதேச சபை முன்வந்திருந்தமைக்கு எந்தவொரு குறிப்புக்களும் காணப்படவில்லை. | வேண்டும். |
| 05 | கந்தளாய் பேராறு வீதியில் இரண்டு சிறு மதகுகள் ரூபா 468,285 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், இரண்டு வருட காலமாக அந்த இரண்டு மதகுகளும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்தமைக்கு வீதியில் இது வரை நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படாமை காரணமாக இருந்தது. | இனங்காணும் கட்டத்தின் போது தங்களுக்கு இரண்டு மதகுகள் அளவில் வழங்குமாறு விவசாய அமைப்புக்களினால் கோரப்பட்டிருந்ததுடன், பங்குபற்றலின் கீழ் தமது ஊழியத்தை ஈடுபடுத்தி வீதியை அமைத்துக் கொள்வதற்கு அவர்கள் இணங்கியிருந்தனர். அதனால் நீர்ப்பாசன திணைக்களத்தினால் இரண்டு மதகுகளை நிர்மாணிப்பதற்காக மாத்திரம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. காணப்பட்ட கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமை மற்றும் அந்த மக்களுக்கு ஏற்பட்டுள்ள தாக்கங்கள் நிதி கஷ்டங்களின் காரணமாக அவர்களின் ஊழியத்தை ஈடுபடுத்தி வேலைகள் இன்னும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வீதியின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| 06 | கந்தளாய் குசுமன்கடவல கால்வாய் பக்க சுவர் நிர்மாணிக்கும் ஆரம்ப திட்டத்தின் பிரகாரம் சுவரின் மேற்பகுதி 0.6 மீற்றர் அகலமாக இருக்க வேண்டும். மதிலின் மேற்பகுதி 0.45 மீற்றர் அகலம் அளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்தமை களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | இந்த பக்க சுவிரின் உயரம் 0.6 மீற்றருக்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் நிர்மாணங்களுக்கு இடையே காட்டின் நிபந்தனைகளுக்கு இணங்குவதற்காக 0.45 மீற்றர் உயரம் குறைக்கப்பட்டிருந்தது. உள்ளபடியான அளவிடைகளின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், கொடுப்பனவு செய்யப்பட்ட பணிகளுக்கு மேலதிகமாக கொடுப்பனவுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. | இடத்தின் நிலைமை தொடர்பாக சரியாக கவனம் செலுத்தி மதிப்பீடு தயாரிக்குமாறு உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட வேண்டும். |

## 3.3 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| இலக்கம் | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 01 | செயற்திட்டத்தின் கணக்கீட்டிற்காக ரூபா 7.4 மில்லியன் செலவில் கணனி மென்பொருள் முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் உரிய செயற்பாட்டு கைநூல் தயாரிக்கப்படாதிருந்ததுடன் செயற்பாட்டிற்காக உள்நுழைவினை வழங்குவதற்கு மற்றும் மென்பொருளின் குறித்த தகவல்களின் அனுபவத்தை பெற்றுக்கொள்வதற்கு இது வரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட முகாமைத்துவம், செயற்பாடுகள் மற்றும் மதிப்பீடுகளுக்காக உதவி வழங்குவதற்காக முழு விபரங்கங்களை உள்ளடக்கிய மாதிரிகள் மற்றும் படிவங்களின் அடிப்படையில் அறிக்கைகளை ஒன்று சேர்த்தல், களஞ்சியப்படுத்துதல், தயாரித்தல் மற்றும் தயாரிப்பதற்காக செயற்திட்ட தகவல்கள் முகாமைத்துவம் செய்வதற்காக செயற்திட்ட முகாமைத்துவ தகவல் முறைமை அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. முகாமைத்துவ தகவல் முறைமை செயற்திட்டத்தில் நிதி முகாமைத்துவம், பெறுகைகள், ஒப்பந்த முகாமைத்துவம், சொத்துக்கள் முகாமைத்துவம், சம்பள முகாமைத்துவம் மற்றும் மதிப்பீடு என்ற சில தொகுதிகளை உள்ளடக்கியிருந்தது. ஒவ்வொரு தொகுதிகளுக்காகவும் தரவுகளை உள்ளடக்குதல், தயாரித்தல் மற்றும் அறிக்கையிடல்களை உருவாக்குவதற்காக பல்வேறு உப முறைமைகள் பயன்படுத்துவதற்காக குறித்துரைத்த பணி தொடர்பான செயற்பாடுகள் வழிகாட்டி மற்றும் தொழில்நுட்ப அனுபவங்களை வழங்குவதற்காக விரிவான செயற்பாட்டு கைநூல் தயாரிக்கப்பட்டுள்ளது. முகாமைத்துவ தகவல் முறைமையை பயன்படுத்துவதற்காக மதியுரையாளரினால் உள்ளகரீதியான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் சில நடாத்தப்பட்டுள்ளது. | செயற்திட்ட செயற்பாடுகளுக்காக மென்பொருள் முறைமையை பயன்படுத்தல் வேண்டும். செயற்பாட்டு கைநூல் வழங்கப்பட வேண்டும். மென்பொருள் முறைமைகள் உரிய அதிகாரிகளுக்கு செயற்திட்டத்தின் இறுதியில் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| 02 | செயற்திட்டம் 2021 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டமையினால் அதன் பின்னர் உரிய நோக்கங்களை அடைந்து கொள்வது தொடர்பில் பாதகமாக தாக்கமளித்திருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டத்தை பூர்த்தி செய்யும் அடிப்படையில் சொத்துக்கள் உரிய நிறுவனங்களுக்கு உரித்தாகுவதுடன், அவர்களினால் அவை பராமரிக்கப்படும். அந்த நிறுவனங்களின் தேவைக்காக அந்த சொத்துக்களை ஆக்கபூர்வமானதாக ஈடுபடுத்தப்படுகின்றதா என்பது தொடர்பில் செயற்திட்டத்தினால் வழிகாட்டியொன்று வழங்கப்படும். | சொத்துக்களின் இருப்பை உறுதிப்படுத்துதல் வேண்டும். |